மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

குடிநீர்

***1715—திரு. அ. சௌந்தரபாண்டியன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

லால்குடி தொகுதி, லால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்டம் எதுவும் இந்த நிதியாண்டில் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

2012 ஏப்ரல் 11]

வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

72—

சொந்தக் கட்டடம்

*__8726__—**திரு. ப. மோகன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, வடக்கனந்தல் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் வருவாய் மாவட்டம், கள்ளக்குறிச்சி பதிவு வட்டத்தில் இயங்கி வருகின்ற வடக்கனந்தல் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு நிலம் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, வடக்கனந்தல் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்த இடம் ஒதுக்கப்பட்டு, பேரூர் மன்றத்தின் சார்பாகத் தீர்மானமும் கொடுக்கப்பட்டு, வருவாய்த் துறையினுடைய அலுவலகத்திலே அது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இருக்குமேயானால், கட்டடம் கட்டித் தரப்படும் என்று சொன்னார். நம்முடைய அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*